# குருசேத்திரம்

කුරුසේත්තිරම්

Guruseththiram

களம்:ஒன்று கணை:மூன்று ஓகஸ்ட்,2020




சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்தே...

# குருசேத்திரம்

சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்தே…

**பிரதம ஆசிரியர்**

திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்

**இணை ஆசிரியர்கள்**

திரு.ஞா.இரத்தினசிங்கம்
திரு.ம.நிரேஸ்குமார்

**அட்டைப் பட வடிவமைப்பு**

திரு.நா.அம்பிகைபாகன்

**வெளியீடு**

குருசேத்திரம் வெளியீடு
யாழ்ப்பாணம்.

**தொடர்புகளுக்கு**

**guruseththiram@gmail.com**

# குருசேத்திரத்தின் உள்ளே…

பக்கம்


- ஆசிரியரின் உள்ளத்திலிருந்து 01
- கட்டுருவாக்கவாதமும் ஆசிரியர்களும் 03
- ஆசிரியர் கல்வி : அனுபவ நோக்கு 05
- உன்னத பாடசாலைகளின் தரிசிப்பு : கண்டி/கிங்ஸ்வூட் கல்லுர்ரி 08
- விபத்து ஓர் அனர்த்தம் 10
- அபிநயம் 12
- சேர் பொன். இராமநாதன் 14
- கற்றல் முகாமைத்துவ முறைமை – சில விளக்கங்கள் 17
- Let’s Follow Our Own Models 21
- குருசேத்திரமே நீ வாழ்க! 22

## ஆசிரியரின் உள்ளத்திலிருந்து...



எமது பிரதேசங்களிலும், எமது நாட்டிலும் இன்று மறைமுகமான தாக்கங்களை ஏற்படுத்துகின்ற பல செயற்பாடுகள் நடை பெற்று வருவதை காண முடிகின்றது. இவை தற்போது ஏற்பட்டுள்ள உலகளாவிய கொரோனா வைரஸ் அச்சுறுத்தலை விடவும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துகின்ற நிலைமை காணப்படுகின்றது. நிலம் மாசடைதல், நீர் மாசடைதல், வளி மாசடைதல் போன்ற செயற்பாடுகள் பெருகி வருவதுடன் இது பற்றிய விழிப்புணர்வு அருகி வருவதையும் காண முடிகின்றது.

கழிவுகளை முகாமைத்துவம் செய்வது தொடர்பான முயற்சிகளும், விளம்பரங்களும் அதிகளவில் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் பொதுமக்களின் செய்றபாடுகள், அரச நிறுவனங்களின் செயலாற்றுகைகள் பற்றிய மீள்பார்வையும் சுய விழ்ப்புணர்வும் அவசியமாகின்றது. இவ்விடயங்களில் உள்ளூராட்சி நிறுவனங்களின் பங்களிப்புக்கள் கணிசமாகக் காணப்படுகின்ற போதிலும், இவை இன்னமும் வினைப்படுத்தப்பட வேண்டிய நிலை காணப்படுகின்றது. ஒவ்வொரு குடும்பங்களும், ஒவ்வொரு அலுவலகங்களும் கழிவு முகாமைத்துவம் தொடர்பான செயற்றிட்டங்களை மேற்கொள்ளுவதன் மூலம் இதனை சாத்தியப்படுத்தலாம்.

பொதுவாக பிளாஸ்ரிக் (நெகிழி) பொருட்களின் பாவனையை குறைத்தல், மீள் சுழற்சிக்கு பயன்படுத்துதல், மீள் பாவனை மூலம் பிளாஸ்ரிக் கழிவுகளை குறைத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். இங்கு இதனை மற்றவர்கள் சொல்லி, சட்டங்கள் போட்டு, தண்டனை வழங்கித்தான் நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற அவசியமில்லை.





குப்பைகளை வீதிகளில் எறியும் முன் ஒரு கணம் மனங்களினால் அவரவர்களின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள், அயலவர்கள் பற்றிச் சிந்தித்ததால்...

மாற்றங்கள் மற்றவர்களிலிருந்து உருவாக வேண்டுமென்பதை விடுத்து மாற்றங்கள் என்னிலிருந்து ஆரம்பிக்க வேண்டுமென ஒவ்வொருவரும் சிந்திக்கத் தொடங்க வேண்டும்.

நாம், நமது சந்ததியினர் மகிழ்ச்சியாக வாழ வேண்டுமென்ற எண்ணம் கொண்டவர்கள். எனவே உள்ளூர் உற்பத்திகளைப் பயன்படுத்தவதன் மூலம் குறிப்பாக தென்னை, பனை போன்றவற்றிலிருந்து தயாரிக்கும் பொருட்களை வீடுகளிலும், அலுவலகங்களிலும் பயன்படுத்துவதன் மூலம் இப்பிரச்சினைகளை ஓரளவு குறைக்கலாம். அது மாத்திரமன்றி சுய பொருளாதாரத்தையும் கட்டியெழுப்பலாம்.

முயற்சிப்போம் ... வெற்றியடைவோம்...... எமது மகிழ்சியான எதிர்காலம் நமது மனங்களிலேயே...

**திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்**
**பிரதம ஆசிரியர்.**

## கட்டுருவாக்க வாதமும் ஆசிரியர்களும்

புதிய பாடத்திட்டங்களின் ஆக்கபூர்வமான தன்மையைக் கருத்தில் கொண்டு, நிலைமாற்றம் மற்றும் கட்டுருவாக்கவாத கற்பித்தல் பற்றிய கோட்பாடு மற்றும் கருத்துக்கள், கல்விப் புலத்திலுள்ள நிர்வாகிகளுக்கும், அனைத்து தரங்கள் உள்ளிட்ட பாட ஆசிரியர்கள் மற்றும் மாணவ ஆசிரியர்களுக்கும் பயன்படக் கூடிய தொழில்வாண்மை விருத்திச் செயற்றிட்டங்கள் மூலம் அமுல்ப்படுத்த வேண்டியது அவசியமாகும். நிலைமாற்றம் மற்றும் கட்டுருவாக்கவாத கற்பித்தல் உத்திகளை நடைமுறைப்படுத்தும் ஆசிரியர்களுக்கு நிர்வாக ரீதியான ஆதரவும் ஊக்குவிப்புக்களும் வழங்கப்படுவதுடன் அவர்களின் சாதனைகள் மற்றும் சிறந்த பயிற்சிகள் மற்றவர்களுக்கும் பகிரப்படுவதுடன் தொழில் வாண்மைத்துவ விருத்திக்கு பாடசாலை மட்டத்தில் உள்ள திட்டங்களை வினைத்திறனுள்ள வகையில் நடைமுறைப்படுத்துதல் அவசியமாகும்.

கல்வியியற் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், தேசிய கல்வி நிறுவகம், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் போன்ற ஆசிரியர் பயிற்சி வழங்கும் நிறுவனங்கள் மேற்கொள்ளுகின்ற கட்டுருவாக்கவாத நடைமுறைகள் மற்றவர்களுக்கு மாதிரியாக அமைதல் வேண்டும். மேலும் ஆசிரியர் மத்திய நிலையங்கள், தொழில் வாண்மை விருத்தி நிறுவனங்களின் செயலமர்வுகளில் ஆசிரியர்களுக்கு கட்டுருவாக்கவாத நடவடிக்கைகள் மற்றும் உத்திகளைப் பயன்படுத்தும் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இத்தகைய நடைமுறைகளின் தாக்கங்கள் குறித்த கலந்துரையாடல்கள் இந்த செயலமர்வுகளில் சேர்க்கப்பட வேண்டும். கற்பித்தலுக்கான மாற்றத்தை ஆசிரியர்கள் செய்யத் தொடங்கும் போது அவர்களின் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்வு காணக் கவனிக்கப்பட வேண்டும். எதிர்பார்ப்பது என்ன? என்பதற்கான விளக்கங்கள், நடைமுறைப் பரிந்துரைகள், உறுதியளித்தல் மற்றும் ஆசிரியர்களின் சவால்கள் பற்றிய நேர்வகையான புரிதல்கள் கட்டுருவாக்கவாத அணுகுமுறைகளை மேம்படுத்தும்.

ஆசிரியர்களின் தற்போதைய தனிப்பட்ட, நடைமுறை அறிவை, நட்பு மற்றும் ஆக்கபூர்வமான பாணியில் வழங்கப்பட்ட தகவல்கள் ஆசிரியர்களை தங்கள் சொந்த தொழில்வாண்மை மேம்பாட்டு செயற்பாடுகளில் ஈடுபட ஊக்குவிக்கக்கூடும், மேலும் புதுமையான நடைமுறைகளைப் பயிற்சிப் படுத்துவதில் ஆசிரியர்கள் குறைவான அக்கறையுடன் காணப்படுகின்றார்கள். மாற்றம் என்பது ஒரு மேம்பாட்டு செயல்முறையாகும், இதில் நடைமுறை பெரும்பாலும் கோட்பாட்டின் விளக்கத்திலேயே தங்கியுள்ளது. ஆசிரியர்கள், கட்டுருவாக்கவாத நடைமுறைகளை முயற்சிக்க ஊக்குவிக்க, சுய பிரதிபலிப்புடன் இயங்க வேண்டும்.

கல்வியில் கற்பித்தல் நடைமுறையை மேம்படுத்துவதற்கான சில சாத்தியங்களையும், தொழில்வாண்மை விருத்திக்காக பாரம்பரியமாக வழங்கப்பட்ட விதம் மற்றும் புதிய பாடத்திட்டங்கள் செயல்படுத்தப்படுவது குறித்த சில ஐயவினாக்களையும் எழுப்புகிறது. புதிய பாடத்திட்டங்கள் ஒரு முழுமையான கட்டுருவாக்கவாத பகுத்தறிவை வலியுறுத்துகின்றன. புதிய பாடத்திட்டங்களை செயல்படுத்துவது ஆசிரியர்கள் கற்பிக்கும் விதத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் செய்ய வேண்டும். பாடத்திட்டங்களை அடிப்படையாகக் கொண்ட ஆக்கபூர்வமான தத்துவத்தைப் புரிந்துகொள்வதோடு, ஆசிரியர்கள், மற்றும் இந்த புதிய பாடத்திட்டங்களை செயல்படுத்துவதில் ஈடுபட்டுள்ள மற்றவர்கள் ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்களை புரிந்து கொள்ள வேண்டும், ஏனெனில் அவை பாரம்பரியமான கற்பித்தல் வடிவங்களிலிருந்து ஆக்க பூர்வமானவையாக மாறுகின்ற உத்திகள், அவர்கள் மாற்றங்களை எவ்வாறு செய்யலாம் என்பது பற்றிய சிந்தனை மேலெழ வேண்டும். பொதுவாக, தொழில்முறை மற்றும் பாடத்திட்ட மேம்பாடு என்பது ஒரு வளர்ந்து வரும், தனிப்பட்ட மேம்பாட்டு செயல்முறையாகும், அதுவே ஆக்கபூர்வமானது. கற்பித்தல் குறித்த ஆசிரியர்களின் சொந்த கட்டமைப்பை மாற்ற ஆசிரியர்களை அனுமதிக்கும் ஒரு ஆதரவு கூட்டு மற்றும் நிர்வாக ஊடகம் இந்த செயல்முறைக்கு பெரிதும் உதவக்கூடும்.

**திரு. சு.பரமானந்தம்**
**பீடாதிபதி.**

# ஆசிரியர் கல்வி : அனுபவ நோக்கு

**சென்ற இதழ் தொடர்ச்சி...**

“எந்த ஒரு கல்விமுறையும் அதன் ஆசிரியர் தரத்தைவிட உயர்ந்ததாக இருக்கமுடியாது”. இற்றைக்கு நாற்பது வருடங்களுக்கு முன் இலங்கை கல்வி நூற்றாண்டு மலரில் ஆசிரியர் கல்வி தொடர்பாக தெரிவிக்கப்பட்ட கூற்று இதுவாகும். இக்கருத்தானது மாற்றமுறும் கல்வி முறைக்கு ஏற்றவாறு தமது தரத்தை ஆசிரியர்கள் அதிகரித்துக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி நிற்கின்றது. ஆசிரியர்கள் மாற்றத்திற்கான முகவர்களாவார் என்ற இன்னொரு கருத்தும் காணப்படுகின்றது. மாற்ற முறும் கல்வி உலகின் தேவையை நிறைவுசெய்வதற்கு கல்வி உலகமும் மாற்ற முற வேண்டும். அதற்கேற்ப ஆசிரியர் கல்வி உலகமும் ஆசிரியர்களும் மாற வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்ததப்படவேண்டியுள்ளது. அதே வேளை 40 ஆண்டுகளுக்கு முன் குறிப்பிட்ட விடயம் தற்போதும் எமக்கு பொருந்துவனதாகவே உள்ளது. காரணம் ஒவ்வொருவரும் தான். எனினும் அதற்கான ஏற்பாடுகளை செய்பவர்களிடத்திலும் நடைமுறைப் படுத்துபவர்களிடத்திலும் அதிக பொறுப்புக்கள் இருக்கின்றன.

- தேசிய கல்விக்கொள்கைகள் சமூக எதிர்பார்க்கைகளுக்கு அப்பால் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு இட்டுச் செல்லக்கூடிய பொருத்தமானவர்களை உருவாக்கக்கூடியதாக அமைக்கப்படவேண்டும். கல்விமூலம் சான்றிதழ்களைப் பெற்றவர்களை உருவாக்குவதை விடுத்து நாட்டின் உற்பத்தித்துறைக்கு பொருத்தமான மனித வளங்களை உருவாக்கக்கூடியதாக கல்விக்கொள்கைகளும் அதன் கலைத்திட்ட ஏற்பாடுகளையும் நடைமுறைப்படுத்துவதில் எல்லோரும் கவனம் செலுத்துதல் வேண்டும். கல்விநிறுவனங்கள் வெறுமனே சான்றிதழ் பெறுவதற்கு சொல்லிக்கொடுக்கும் நிறுவனங்களாக இல்லாது வாழ்க்கைக்கு தயார்படுத்தும் மாணவர்களை வழிப்படுத்தும், தலைமைத்தவப் பண்புகளையும் தேடலையும், புத்தாக்கத்தையும் கிளர்ந்தெளச்செய்யக்கூடிய வாய்ப்புக்களை மாணவர்களுக்கு வழங்க வேண்டும். இதன் முக்கிய பொறுப்பு கலைத்திட்டத்தினை அமுல்படுத்தும் ஆசிரியர் குழாத்திற்கே உரியது. மாணவர்களிடம் தன்னம்பிக்கையையும் தன்னையும் தன் நாட்டையும், சூழலையும் நெசிக்கும் தன்மையை வளர்த்தெடுப்பதற்கு பாடவிடங்களை தேசிய கறிக்கொள்களுடன் - அடிப்படைத் தேர்ச்சிகளுடன் இணைத்து அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள, தேடல்களை மேற்கொள்ள மாணவர்களை வழிப்படுத்த வேண்டும்.

- கல்வி நிர்வாகமும் பாடசாலைகளும்: கல்வி நிர்வாகமும் பாடசாலைகளும் பாடசாலைக் கலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தி மதிப்பெண்களை அதிகம் பெற்றுக்கொள்ளககூடியவர்களை உருவாக்குகின்ற பணிகளுக்கு வெற்றிகரமாக உதவிவருகின்றன. நாட்டிற்குப் பொருத்தமானவர்களையும் தொழில் உலகுக்கு பொருத்தமானவர்களையும், பிரச்சினைகளுக்கு இலகுவாக தீர்வு காணக்கூடியவர்களையும் புதிய நூற்றாண்டுக்கான சவால்களையும் எதிர்கொள்ளக்கூடியவர்களையும் அவை உருவாக்க முனைய வேண்டும். இதற்கான ஊற்பாடகள் பாடத்திட்டத்திலும் வழிகாட்டல் கறிப்பக்களிலும் போதுமானளவு வழங்கப்பட்டுள்ள போதிலும் அதனை நடைமுறைப்படுத்தவதில் இடர்பாடுகள் காணப்படுகின்றது.

- பெற்றோர் பிள்ளைகளின் எதிர்பார்க்கைகள்: பெற்றோர்களும் சமூகமும் பிள்ளைகள் எல்லோரும் உயர் தொழில் வாய்ப்பைப் பெறக்கூடியவர்களாக கல்வி மூலம் உருவாக்கப்படவேண்டுமென எதிர்பார்க்கின்றார்கள். இதில் தவறேதும் இல்லை. ஆனால் இங்கு பிள்ளைகளின் விருப்புக்கள், அவர்களுக்கு இருக்கக்கூடிய விசேட ஆற்றல்கள், திறன்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை. போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெறுபவர்கள் மட்டும் பாராட்டப்படுகின்றார்கள். சந்தர்ப்பம் அளிக்கப்படுகின்றார்கள் ஏனையவர்கள் பற்றி எந்தக்கவனமும் செலுத்தப்படுவதில்லை. கல்வி சகலரையும் கவனத்தில் கொள்ள வேண்டும். வெற்றிபெற்றவர்களாக உருவாக்க வெண்டும். அதற்கேற்பவே பெற்றொர்களும் சமூகமும் தமது எதிர்பார்க்கைகளை மாற்றிக்கொள்ள வேண்டும். தேர்ச்சிமட்டக்கல்வி கூறப்படுவது போல பிள்ளைகளின் தேர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படல் வேண்டும்.

- தொழில்கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படாமை பாடசாலைக்கல்வி பரீட்சையை மையமாகக்கொண்ட, சான்றிதழ் வழங்கும் கல்வியாக மட்டும் இருக்காமல் தொழில் நோக்கிய கல்வியாகவும், அமைய வேண்டும். சுயதொழில் வாய்ப்பிற்கு இட்டுச் செல்லக்கூடிய தொழிற்கல்வி அடிப்படைகளை ஏற்படுத்தக்கூடிய கல்வி வழங்கள் முறைகளைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். பொதுக்கல்வி முறையிலிருந்து இடைவிலகிச் செல்வோர், க.பொ.த. உயர்தரத்தின்பின் பாடசாலையைவிட்டு சமூகத்திற்குள் செல்லும்போது எந்தவிதமான தொழில் ஆயத்தங்களுமின்றியும், எந்தவித தொழில் வழிகாட்டலுமின்றியும் இருட்டிலே விடப்பட்டவர்களைப் போல் வெளியே வருகின்றனர்.

இவ்வாறானவர்களினால் சமூகத்தில் பிரச்சினைகள் எழ சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. இவர்களுக்கான தொழில் வழிகாட்டல்கள் பாடசாலைகளினூடாகவே வழங்கப்படுதல் வேண்டும். பாடசாலைக்கல்வியை விட்டு வெளியெறும் மாணவர் அறிவியல் ரீதியல் நல்ல சாதனைகளை நிகழ்தினாலும் பண்புரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒழுக்கஅமைப்போடு வெளியெறுவதில் குடும்பத்திற்கு அடுத்தநிலையில் பாடசாலைகளே முக்கியத்துவம் பெறுகின்றன. பொதுவாக கீழைத்தேய நாடுகளில் பாடசாலைகளில் ஒழுங்க மீறல்கள் அதிகரித்தவண்ணமே காணப்படுகின்றது. பாடசாலை மட்டத்தில் ஒழுக்க மீறல் சம்பவஙகளைக் கையாள்வதில் சில நுட்பமுறைகளையும் முன்னேற்பாடுகளையும் ஆசிரியர்களும் மாணவர்களும் மேற்கொள்ளுதல் பயனுள்ளதாக அமையும். இதற்காக நான் முன்னர் குறிப்பிட்டது போல் SSPS களுக்கிடையிலான இணைவு அதாவது பாடசாலை (School) - ஆன்மீகம் (Spritual) - பெற்றார் (Parents)- சமூகம் (Socity) ஆகியவற்றின் இணைவு பாடசாலைக்கல்வி தொடர்பான அல்லது பொதுக்கல்வி தொடர்பான இலக்குகளை இலகுவாகச் சென்றடைவதற்கான ஒரு வழியாகவே கருதுகின்றேன்.

நிறைவாக ஒரு வினைத்திறனுள்ள ஆசிரியர் ஒரு தெளிவான தொடர்பாளன், ஒரு நல்ல தொடர்பாளன் ஒரு விளைதிறனுள்ள ஆசிரியர் - ஒரு ஓவியரிடம் உள்ள சிறிய தூரிகைதான் மிகப்பெரிய ஓவியங்களை தீட்டுகின்றது. ஆகவே ஆசிரியனிடம் காணப்படும் நல்ல தொடர்பாடல் மாபெரும் அறிஞர்களை உருவாக்குகின்றது. இது ஆசிரியர்களினால்தான் சாத்தியமாக்கலாம் .ஏனெனில் எந்தவொரு கலைத்திட்டச் செயற்பாடுகளின் வெற்றியும் ஆசிரிய சமூகத்தின் செயலாற்றலிலேயே தங்கியுள்ளது.

**முற்றும்.**

**திரு.க.பேர்ணாட்**
**ஓய்வு நிலைப் பீடாதிபதி.**

## உன்னத பாடசாலைத் தரிசிப்புகள் : கண்டி/கிங்ஸ்வூட் கல்லூரி




மத்திய மாகாணம் கண்டி மாவட்டத்தில் கிங்ஸ்வூட் கல்லூரி. புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனை படைத்த, யாழ்ப்பாணக் கல்வி வலயத்தினைச் சேர்ந்த பாடசாலைகளின், நாற்பது அதிபர்களுடன், கல்விப் பரிமாற்றச் சுற்றுலாவானது (Educational Exchange Visit) அப்பாடசாலையைத் தரிசிக்கும் வாய்ப்பினை அளித்திருந்தது. 1987 இல் ஆசிரிய முன் சேவைப் பயிற்சியில் 21 நாட்கள் (வதிவிடப்பயிற்சி) கழித்த பாடசாலைக்கு கிட்டத்தட்ட 25 வருடங்கள் கழித்துச் செல்லும் போது ஏதோ பல வருடங்கள் படித்த பாடசாலையொன்றிற்கு மீண்டும் செல்லும் மனஉணர்வு.

பெரிய அளவில் மாற்றங்கள் இல்லாத போதிலும் இயற்கையன்னை அளித்த அருங்கொடை பெற்ற மலையக வனப்பு கல்லூரியின் அழகை மேலும் மெருகூட்டிய வண்ணம் காணப்பட்டது.

பாடசாலையின் சிரேஸ்ட ஆசிரியர்கள் மற்றும் மாணவ தலைவர்கள் வரிசையாக நின்று மலர்ச்செண்டு தந்து அழைத்துச் சென்றமை, அவர்களின் பண்பாட்டுச் செழுமையை உணர்த்தி நின்றது. பிரதான மண்டபத்தில் (இது எனக்கு மிகவும் அத்துப் படியான மண்டபம். ஆசிரிய முன் சேவைப் பயிற்சியில் கலை நிகழ்வுகள் பரிணமித்த இடம்). நாம் கூடிய போது இரண்டு சிரேஸ்ட மாணவர்கள் பாடசாலையின் வரலாற்றினை முன்வைப்புச் செய்தார்கள். அளிக்கையினை இரண்டு மாணவர்களும் முன்வைக்கும்போது, இடைவெளிகள் பொருத்தமான முறையில் இன்னோர் மாணவனால், பியானோ மூலம் மெருகூட்டப்பட்டமையானது, மிக அருமையாக இருந்தது. புதினைந்து நிமிட நேரத்தில், ஒரு பிரபலமான கல்லூரியின் வரலாற்றினை நாற்பது வரையான வெளிமாவட்ட கல்விப் புலத்தினைச் சேர்ந்த அறிஞர்களைக் கவரும் வகையில், எந்த ஒரு பிசிறும் இல்லாமல், மாணவர்கள் முன் வைப்புச் செய்யும் வண்ணம், ஆற்றல் பகிரப்பட்டுள்ளது. எமது பாடசாலைகளுக்கு நாம் இந்த அனுபவப் பகிர்வினை ஏற்படுத்த வேண்டும்.

அத்துடன் பதிதாக (ஆசிரிய முன் சேவைப் பயிற்சியின் போது அது இருக்கவில்லை) ரம்மியமான நீச்சல் குளம் அமைக்கப்பட்டிருந்தது. அதற்கு அவர்கள் சொன்ன விளக்கம் வினோதமாக இருந்தது. “இலங்கை ஒரு தீவாக இருப்பதனால், இலங்கையர் அனைவரும் நீச்சல் தெரிந்தவராக இருக்க வேண்டும்.” நல்ல வேளை என்னைப் பார்த்து நீச்சல் தெரியுமா? என்று மானத்தை வாங்காமல் விட்டார்கள்.



பாடசாலைகளில் மாணவர்களைச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லும் வேளைகளில் பல மாணவர்கள் குளம் குட்டைகளில் ஆழமறியாமல் காலை விட்டு, கூடச் சென்ற ஆசிரியர்கள் நீச்சல் தெரியாமையால் பரிதவித்த, இழப்புகளைச் சந்தித்த, சந்தர்ப்பங்கள் ஏராளமல்லவா?

ஆசிரியர்கள் ஒவ்வொருவருக்கும் நீச்சல் தெரிய வேண்டும் என்ற எண்ணம் அப்போது என்னை ஆக்கிரமித்தது. ஆசிரியர் நீச்சல் கற்றுக் கொள்ள வேண்டுமாயின் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் ஒரு நீச்சல் தடாகம் வேண்டும்.

எம்மிடம் பயிற்சி பெற்றுச் செல்லும் ஒவ்வொரு ஆசிரியரும் நீச்சல் தெரிந்தவராக, நீச்சலில் வல்லுநர்களாக இருக்க வேண்டியது அவசியம்.

எனவே எமது கல்லூரியிலும் ஒரு நீச்சல் தடாகம் இருக்க வேண்டும்.

**திரு.ஞா இரத்தினசிங்கம்**
**விரிவுரையாளர்**

# விபத்து ஓர் அனர்த்தம்

**எமது பிரதேசத்தை உலுக்கிய விபத்துக்கள் சில…**

- ஆகாஷ் மொரட்டுவ பல்கலைக் கழகத்தின் பொறியியல்துறை 3ம் வருட மாணவன்.தேசிய மட்டச் சாதனை வீரன். பெற்றோருக்கு ஏக புத்திரன். ஒரு பொழுது நண்பருடன் மகிழ்ந்திருக்கப் புறப்பட்டவன். சில மணியில் உயிரிழந்தான்.
- கோப்பாய் எரிபொருள் நிலையத்தில் இருந்து வீதிக்கு நகர்ந்தபோது விபத்தில் மரணித்த யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மருத்துவர்.
- வவுனியா பொது வைத்தியசாலை வைத்திய அதிகாரி வவுனியாவிலிருந்து கொழும்பு செல்லும் வழியில் விபத்தில் சிக்கி மரணமானார். அவருடன் பயணித்த அவரது பெறாமகள், க.பொ.த உயர்தரப்பரீட்சையில் வவுனியா மாவட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவி அதே விபத்தில் உயிரிழந்தார்.
- பாதுகாப்பற்ற ரயில் கடவையைக் கடக்க முற்பட்ட பொறியியலாளரும் நண்பர்களும் ரயில் மோதி மரணித்தனர்.
- ஜேர்மனியில் இருந்து வந்த உறவுகளும் அவர்களை அழைத்து வரச்சென்றோரும் ஹயஸ் வானுடன் ஹன்ரர் மோதி மரணம்.

இப் பட்டியல் தொடர்ந்து நீண்டு கொண்டே செல்கின்றமை நாம் அனைவரும் அறிந்த ஒன்றே. இந்த விபத்துக்களில் இறந்து போனவர்கள் அனைவரும் எமது சமூகத்தின் சொத்துக்கள் அல்லவா!

**விபத்து ஓர் அனர்த்தம்!**

இது ஒரு செயற்கை அனர்த்தம். அதாவது மனிதனால் ஏற்படுத்தப்படும் அனர்த்தம். எனவே தவிர்க்கப்படக் கூடியது. விபத்துக்கள் பல வகைப்பட்டவை. அவற்றில் ஒன்றே வீதி விபத்துக்கள். இலங்கையில் 3மணித்தியாலத்திற்கு ஒரு வீதி விபத்து நிகழ்ந்து கொண்டிருப்பதாக தரவுகள் தெரிவிக்கின்றன. வீதி விபத்துக்கள் பெரும்பாலும் மனிதர்களின் பாதுகாப்பற்ற நடத்தைகளினாலேயே நிகழ்கின்றன. எனது மற்றும் சமூகப் பாதுகாப்பிற்காக நான் எனது விழிப்புணர்வுடனான நடத்தைகளால் விபத்து ஏற்படும் சந்தர்ப்பங்களைக் குறைக்க முடியும் அல்லவா.

**சில உண்மைகள்!**

கொரோனா கிருமித் தொற்றிலிருந்து எம்மைப் பாதுகாக்க எத்தனை விழிப்புடன் செயற்படுகிறோம். செயற்பட அறிவுறுத்தப் படுகிறோம். இலங்கையில் கடந்த 6 மாதங்களில் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 11 மட்டுமே. அதே காலப்பகுதியில் வீதி விபத்தினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 379 எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அன்றாடம் கொஞ்சம் கொஞ்சமாக சமூகத்தின் மனித வளத்தை உறிஞ்சிக் குடித்துக் கொண்டிருக்கும் இக் கொடிய அனர்த்தத்திற்கு எதிராக நாம் என்ன செய்கிறோம்?

**எம்மை நோக்கிச் சில கேள்விகள்**

- விபத்து மனித நடத்தைகளால் உருவாக்கப்படுவது. எனவே தவிர்க்கப்படக் கூடியது என்பதை ஏற்றுக் கொள்கிறோமா?
- வெள்ளை நிறத்தில் பளிச்சிடும் பாதசாரிக் கடவைகள் ஊடாக மட்டுமே எத்தனை பேர் வீதிகளைக் கடக்கிறோம்?
- தலைக் கவசம் இல்லாமல் ஏன் மோட்டார் சைக்கிளில் பயணிக்க முற்படுகின்றோம்?
- வீதியில் குறிப்பிடப்பட்டுள்ள வேகக் கட்டுப்பாட்டிற்கு அமைவாக எத்தனை பேர் எமது வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறோம்?
- வேலைக்குச் செல்லும் எத்தனை பேர் கையெழுத்திடும் ஒரு நிமிடத்திற்காய் எமது வாகனத்தின் வேகத்தை அதிகரிக்காது இருந்திருக்கிறோம்?
- ஒளிச் சமிக்ஞைக்காய் நிற்கும் வேளையில் ஒரு நிமிடத்திற்காக சலித்துப் புறப்படத் துடிக்கிறோம் அல்லவா?
- ஒரு வழிப்பாதையில் விரைவாகச் செல்லத் தயக்கமின்றி முற்படுவது ஏன்?
- போதையுடன் வாகனம் ஓட்டத் துணிவது ஏன்?

**சிந்திப்போம்...**

**மாற்றம் இன்றிலிருந்து... மாற்றம் என்னிலிருந்து...**

**திருமதி பப்ஸி மரியதாஸன்**
**விரிவுரையாளர்**

# அபிநயம்

**அபிநயம்** என்பது ஒரு வடமொழிச் சொல்லாகும். கருத்தொன்றை முன்வைத்தல் அல்லது வெளிப்படுத்தல் எனப்படும்.

அபிநயம் நான்கு வகைப்படும்.

- ஆங்கிக அபிநயம்
- வாச்சிக அபிநயம்
- ஆஹார்ய அபிநயம்
- சாத்விக அபிநயம்

**ஆங்கிக அபிநயம்** என்பது அங்கங்களினால் கருத்தை வெளிப்படுத்துவது அங்கங்கள் மூன்று வகைப்படும். இவை திரியாங்கம் எனப்படும். அவையாவன:

1) அங்கம்
2) பிரத்தியாங்கம்
3) உபாங்கம்

**வாச்சிக அபிநயம்** என்பது வார்த்தைகளால் தமது கருத்துக்களை விளக்கிக் கூறுவது ஆகும்.

**ஆஹார்ய அபிநயம்** என்பது ஆடை ஆபரணங்களால் கருத்துக்களை புலப்படுத்துவது ஆகும்.

**சாத்விக அபிநயம்** என்பது பல்வேறு உணர்ச்சிகள் மூலம் கருத்தை வெளிப்படுத்துவது. இது எட்டு வகைப்படும்.
உதாரணம் : வியர்த்தல், நடுங்குதல், அழுதல்...

ஆங்கிக அபிநயம்



சாத்விக அபிநயம்



வாச்சிக அபிநயம்



ஆஹார்ய அபிநயம்



**திருமதி.ஞானசக்தி கணேசநாதன்**
**விரிவுரையாளர்.**



# சேர் பொன் இராமநாதன்

சேர் பொன் இராமநாதன் அவர்கள் இலங்கையின் மிக முக்கியமான தேசத் தலைவர்களில் ஒருவராகக் கருதப்பட்டவர். சிங்களவர்கள் - தமிழர்கள் என இரண்டு தேசிய இனத்தவர்களாலும் தமது தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரே தலைவர் என்றால் அது சேர் பொன் இராமநாதன் அவர்கள்தான். யாழ்ப்பாண பல்கலைக்கழகம் என்றதும் தமிழர்கள் அனைவரினதும் சிந்தனையில் நிழலாடுவது சேர் பொன் இராமநாதன் அவர்களும் தாய் நாட்டிற்கான அவரது கல்விப் பணிகளுமேயாகும்.

இராமநாதன் 1851 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ம் திகதி திரு திருமதி பொன்னம்பலம் - செல்லாச்சி அம்மை தம்பதிகளின் இரண்டாவது மகனாகக் கொழும்பில் பிறந்தார். இவரது தந்தையாகிய அருணாச்சலம் பொன்னம்பலம் யாழ்ப்பாணத்தில் உள்ள மானிப்பாயை பூர்வீகமாகக் கொண்டவர். தனது தந்தையின் பெயராகிய அருணாச்சலம் என்பதை தனது பிள்ளைகளில் ஒருவருக்குச் சூட்டி மகிழ்ந்த பெருந்தகை இவர். பின்னாளில் சேர் பொன்னம்பலம் அருணாச்சலம் என அனைவராலும் அறியப்பட்ட அருணாச்சலம் சேர் பொன் இராமநாதன் அவர்களின் உடன் பிறந்த சகோதரர் ஆவார். இவரைத் தவிர குமாரசாமி முதலியார் என்னும் இன்னொரு சதோதரரும் இவருக்கு உண்டு.

இவர் தனது பாடசாலைக் கல்வியை கொழும்பு றோயல் கல்லூரியிலும் உயர் கல்வியை சென்னை மாநிலக் கல்லூரியிலும் கற்றார். பின்னாளில் இவர் இலங்கை அரசின் தலைமை வழக்குரைஞர் ஆகவும், இலங்கை சட்டவாக்கப் பேரவையின் இலங்கை கல்விமான்களின் பிரதிநிதியாகவும், இலங்கை சட்டவாக்கப் பேரவையின் வலிகாமம் வடக்குப் பிரதிநிதியாகவும் பணி புரிந்தார்.

இவரது அரசியல் சார்ந்த சேவையானது முழு இலங்கையர்களாலும் போற்றிப் பாராட்டப்பட்டது. 1879 ம் ஆண்டு தனது 28வது வயதில் இலங்கை சட்டசபையின் உறுப்பினராகப் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றார். 1897ம் ஆண்டு விக்டோரியா மகாராணியின் 50வது ஆண்டு நிறைவு விழாவிற்கான இலங்கையின் பிரதிநிதியாகப் பங்கு பற்றுவதற்கு இராமநாதன் அவர்களே தெரிவு செய்யப்பட்டார்.

அந்த விழாவின்போது பிரித்தானியா அரசினால் இலங்கையிம் முழுமையான தேசியவாதி என்னும் கௌரவமும் தங்கப்பதக்கமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 1911ம் ஆண்டு நடைபெற்ற இலங்கையின் சட்டசபைக்கான முதலாவது தேர்தலில் முழு இலங்கையரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரே உறுப்பினராக இராமநாதன் தெரிவு செய்யப்பட்டமையானது தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது. அத்துடன் 1921ம் ஆண்டு பிரித்தானியா அரசினால் இவருக்கு இன்னுமொரு கௌரவம் அளிக்கப்பட்டது. அதுவரை காலமும் பிரித்தானியர்களுக்கு மாத்திரமே வழங்கப்பட்டு வந்த பிரபுப் பட்டம் (Sir) பிரித்தானியா அரசினால் இராமநாதன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இராமநாதன் அவர்கள் இயல்பாகவே சொல்வன்மையும் வாதத் திறமையும் மிக்கவராக விளங்கினார்.



**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ள சேர் பொன் இராமநாதன் அவர்களின் உருவச்சிலை.**

அவரது சொல் வன்மையும் வாதத் திறமையும் தாய் நாட்டிற்காக பல்வேறு சந்தர்ப்பங்களில் பயன்பட்டது. பிரித்தானியா அரசினால் வழங்கப்பட்ட கௌரவங்களுக்காக அவர் ஒரு போதும் பிரித்தானியர்களிடம் தலை வணங்கவில்லை. இலங்கையில் பிரித்தானியர்களால் மேற்கொள்ளப்பட்ட பல நடவடிக்கைகளுக்கு எதிராக வாதாடி இலங்கையர்களின் நலன்களைப் பாதுகாத்தார்.

1915ம் ஆண்டில் சிங்கள அரசியல் தலைவர்களினால் சிங்களவர்கள் - முஸ்லீம்களிடையே இனக்கலவரம் ஒன்று திட்டமிட்டு உருவாக்கப்பட்டது. இக்குற்றம் பிரித்தானியா அரசாங்கத்தினால் ஐயமின்றி நிரூபிக்கப்பட்டு அவ்வரசியல் தலைவர்கள் அனைவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டு, பிரித்தானிய சிறையில் அடைக்கப்பட்டனர். இனக்கலவரத்தைத் தூண்டியமை பாரிய குற்றமாக இருந்த போதும், அந்நியர்களால் இலங்கையர்கள் தண்டிக்கப்படுவதை அதுவும் மரண தண்டனை அளிக்கப்படுவதை விரும்பாத இராமநாதன் பிரித்தானிய அரசாங்கத்திற்கு எதிராகப் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து அவ்வரசியல் தலைவர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை இரத்துச் செய்தது மாத்திரமன்றி அவர்கள் அனைவரையும் சிறையிலிருந்தும் விடுவித்தார். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களால் மீட்கப்பட்ட சிங்களத் தலைவர்கள் அவரைத் தமது தோள்களில் சுமந்த வண்ணம் காலி முகத்திடலைச் சுற்றி வலம் வந்தமை இலங்கை வரலாற்றில் மறக்க முடியாத ஒரு வரலாற்று நிகழ்வாகும். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் இப்பணியை சிலவகித்துப் போற்றும் ஒரு சில சிங்கள அரசியல் தலைவர்கள் தற்போதும் உள்ளனர்.

அரசியல் பணி மாத்திரம் அன்றி சமய, சமூக, கல்விப் பணிகளையும் இராமநாதன் மேற்கொண்டிருந்தார். இந்துக்களின் கல்வி மேம்பாட்டிற்காக உடுவில் இராமநாதன் பெண்கள் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணத்தில் ஆண்கள் பாடசாலையான பரமேஸ்வராக் கல்லூரி என்பவற்றை நிறுவினார். 1970 களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டபோது பரமேஸ்வராக் கல்லூரி பல்கலைக் கழகத்தின் ஒரு பகுதியாக மாற்றப்பட்டது.

சமயப் பணிகள் பலவற்றையும் இராமநாதன் அவர்கள் மேற்கொண்டுள்ளார். இவரது தந்தையினால் கொழும்பு கொச்சிக்கடைப் பகுதியில் குட முழுக்குச் செய்யப்பட்ட ஸ்ரீ பொன்னம்பல வாணேச்சரர் ஆலையத்தைப் புனருத்தானம் செய்து 1912 இல் மீண்டும் குட முழுக்குச் செய்வித்தார். 1923 இல் யாழ்ப்பாணத்தில் சைவ வித்தியா விருத்திச் சங்கம் தோன்றுவதற்கு முக்கிய தூணாக விளங்கியதுடன் அதன் முதற் தலைவராகவும் செயற்பட்டார். தொடர்ந்து பள்ளிக் கூடங்களின் முகாமையாளராகவும் பணியாற்றினார். பின்பட்ட நாட்களில் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் போஷகராகவும் செயற்பட்டார்.

நாட்டுக்காக இவர் செய்த சேவைகளைக் கௌரவிப்பதற்காக கொழும்பில் பழைய நாடாளுமன்ற வளாகத்தில் இவருக்குச் சிலை எழுப்பப்பட்டுள்ளது. இவரது கல்விப் பணிகளைக் கௌரவிப்பதற்காக இராமநாதன் பெண்கள் கல்லூரி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகம் என்பவற்றிலும் உருவச் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பெண்கள் விடுதி ஒன்றிற்கு 'இராமநாதன் விடுதி' (Ramathan Hall) எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இவர் மீது சில விமர்சனங்களும் முன் வைக்கப்பட்டுள்ளன. உயர் சாதியினருக்குச் சார்பாகச் செயற்பட்டார், ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்குச் சார்பான சட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தார், பெண்களுக்கு வாக்குரிமை வழங்குவதற்கு இவர் எதிர்ப்புத் தெரிவித்தார், படித்தவர்களுக்கு மாத்திரமே வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கொள்கையைப் பின்பற்றினார், தாழ்த்தப்பட்டவர்களுக்கு வாக்குரிமை வழங்கப்படக் கூடாது எனத் தேச வழமைச் சட்டத்தை முன்னிறுத்தி டொனமூர் ஆணைக்குழுவின் முன்னால் வாதிட்டார் போன்ற குற்றச் சாட்டுக்கள் இவர் மீத வைக்கப்பட்டுள்ளன. சேர் பொன் இராமநாதன் அவர்கள் இந்நாட்டிற்கு செய்துள்ள சேவைகளை முன்னிறுத்தி நோக்கும்போது இவர் மீதான விமர்சனங்களைப் புறந் தள்ள முடிகின்றது.

**ம.நிரேஸ்குமார்**

## கற்றல் முகாமைத்துவ முறைமை(LMS) தொடர்பான சில விளக்கங்கள்

### கற்றல் முகாமைத்துவ முறைமையின்(LMS) முதன்மையான செயற்பாடு என்ன?

ஒரு நிறுவனத்தின் குறிக்கோள்கள், நிகழ்நிலைப் பயிற்சி உத்திகள் என்பவற்றைப் பொறுத்து கற்றல் முகாமைத்துவ முறைமையின் பங்கானது மாறுபடும். எனினும் கற்றல் முகாமைத்துவ முறைமையின் பொதுவான பயன்பாடு நிகழ்நிலைப் பயிற்சி முயற்சிகளை வரிசைப்படுத்துவதும் கண்காணிப்பதும் ஆகும். பொதுவாக கற்றல் வளங்களானது இம்முறைமையினுள் பதிவேற்றம் செய்யப்படுகிறது. இதனூடாக அவை தொலை நிலையில் கற்பவர்களுக்கு இலகுவான முறையில் எந்த நேரத்திலும் அணுகல் செய்யக் கூடியவாறு காணப்படுகின்றன.

நாம் கற்றல் முகாமைத்துவ முறைமை ஒன்றினை எடுத்து நோக்குவோமானால் அது ஒரு பரந்த தகவல் களஞ்சியமாகும். உள்நுழைவு பயனர் பெயர் (user name) மற்றும் கடவுச்சொல் (password) உள்ள எவரும் இம்முறைமையினை அணுகி எந்நேரத்திலும் எங்கிருந்தும் தமது பயிற்சி மற்றும் கற்றல் வளங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். இக்கற்றல் முறைமையின் கீழ் பயனர்களை நாம் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். முதலாவதாக நிகழ்நிலையில் கற்பவர்கள். அதாவது இம்முறைமையினூடாக தமது கற்றல் நடவடிக்கைகளை அல்லது பயிற்சிகளை பெற்றுகொள்பவர்களைக் குறிக்கும். இரண்டாவதாக மேற்படி முறைமையில் கற்றல் வளங்களை வழங்குவதற்கும் பயிற்சிகளுக்குத் தேவையான உள்ளடக்கங்களை புதுப்பிப்பதற்கும் தயாராக இருக்கும் பயிற்சியாளர்களை அல்லது கற்றல் முகாமைத்துவ முறைமையில் அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் அல்லது முகாமையாளரைக் குறிக்கும்.

### கற்றல் முகாமைத்துவ முறைமையில் பயனடைபவர்கள் யார்?

கற்றல் முகாமைத்துவ முறைமையினூடாக கல்வி நிறுவனங்களும் அதனோடு இணைந்த கற்றல் மேலாண்மை அமைப்புக்களும் பல விதமாக தமது பயிற்சிகளை அல்லது பாடநெறிகளைத் தொடர்கின்றன. இச்செயற்பாடுகளுக்காக அவர்கள் கற்றல் முகாமைத்துவ முறைகளை வடிவமைப்பவர்கள், நிகழ்நிலைக் கற்றல் - கற்பித்தலில் நிபுணத்துவம் பெற்றவர்கள் மற்றும் கல்விப் புலத்திலுள்ள அனுபவம் பெற்றுள்ள துறை சார்த்தவர்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்கின்றனர். இதனூடாக குறித்த நிறுவனங்களும் அதன் பயனர்களும் அவர்களின் பின்புலத்தில் செயற்படும் தொழினுட்பவியலாளர்களும் மிகுந்த பயனைப் பெறுகின்றனர்.

**கற்றல் முகாமைத்துவ முறைமைகளின் தெரிவுகள் யாவை?**

a) Cloud-Based

இந்த கற்றல் முகாமைத்துவ முறை இயங்கு தளங்கள் Cloud-Based இல் வழங்கப்படுகின்றன. குறித்த சேவையை வழங்குபவர் கணினியைப் பராமரிக்கிறார் மற்றும் தொழில்நுட்ப மெருகூட்டல்களை அல்லது புதுப்பிப்புகளைச் செய்கிறார். நிகழ்நிலையில் கற்பவர்கள் மற்றும் முறைமையை பராமரிப்புச் செய்பவர்கள் பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல்லுடன் உள் நுழைகின்றனர். இங்கு எந்தவொரு மென்பொருளையும் நிறுவ வேண்டிய அவசியமில்லை, இம்முறைமையானது விரைவாக கற்றல் முகாமைத்துவ முறைமையில் இணைய விரும்பும் நிறுவனங்களுக்கு சிறந்த தேர்வாக அமைகிறது. இம்முறைமையில் உள்ள குறைபாடு என்னவென்றால், சில Cloud-Based சார்ந்த கற்றல் முறைமைகளைத் தனிப் பயனாக்க முடியாது. அதாவது பாவனையாளரின் அல்லது நிறுவனத்திற்கு ஏற்ற வகையில் வடிவமைப்பது கடினம்.

b) Self-Hosted

இங்கு பாவனையாளர்கள் தமது தேவைக்கு ஏற்ற வகையில் கற்றல் முகாமைத்துவ மென்பொருள் பதிவிறக்கங்களை தமது விற்பனையாளர்களின் தளத்திலிருந்து நேரடிப் பதிவிறக்கம் செய்து பயன்படுத்த முடியும், இவை இவற்றின் ஆக்கபூர்வமான கட்டுப்பாடு மற்றும் தனிப் பயனாக்கத்தை அனுமதிக்கின்றன. குறைபாடு என்னவென்றால், வழக்கமான புதுப்பிப்புகளுக்கு பணம் செலுத்த வேண்டும், மேலும் இவற்றைக் கையாள கணினி அறிவு தேவைப்படலாம்.

c) Desktop Application

சில வகையான Desktop computer களில் கற்றல் முகாமைத்துவ முறைமை மென்பொருளின் பயன்பாடுகள் (Apps) பதிவிறக்கம் செய்யப்பட்டு பயனர்களால் பயன்படுத்தப்படுகிறது. இவற்றின் பயன்பாடுகள் பல்வேறு வகையான சாதனங்களினூடாக பயன்படுத்தக் கூடிய வகையில் வடிவமைக்கப்படுகிறது. இதனூடாக மின்-கற்றல் கற்பித்தல் குழுமமானது இலகுவான முறையில் ஒருங்கிணைந்து தமது செயற்பாடுகளைச் செய்வதற்கு இது வழியேற்படுத்துகிறது.

d) Mobile Application

கற்றல் முகாமைத்துவ முறைமையானது கையடக்கமான சாதனங்களினூடாக எந்த இடத்திலிருந்தும் எந்நேரத்திலும் அணுகல் செய்யக்கூடியதாக காணப்படுகிறது. இதனூடாக பயிற்சியாளர் பயிற்சிக்குத் தேவையான உள்ளடக்கங்களை பதிவேற்றம் செய்யமுடியும். அதுமட்டுமல்ல கற்பவர்கள் தமக்குத்தேவையான விடயங்களை பின்தொடர்ந்து எந்த நேரத்திலும் அணுகல் செய்ய முடியும்.

**கற்றல் முகாமைத்துவ முறைமையின் வாடிக்கையாளர் வகைகள் யாவை?**

a) பெரிய நிறுவனங்கள்

பெரிய நிறுவனங்கள் நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக் கணக்கான ஊழியர்களைக் கண்காணிக்க இந்த கற்றல் முறைமையைப் பயன்படுத்தலாம். உலகளாவிய நிகர்நிலைப் பயிற்சி முயற்சிகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் தங்கள் வாடிக்கையாளர்களை கண்காணிக்க இது பெரிதும் உதவுகிறது.

b) சிறு மற்றும் நடுத்தர வணிகங்கள்

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்கள் இந்த வகை கற்றல் அமைப்புகளிலிருந்து பயனடைகின்றன, ஏனெனில் அவை குறைவான மனித வளங்களை பயன்படுத்த முடியும். மாறிவரும் பயிற்சித் தேவைகளுக்கு ஏற்ப இவற்றினுடாக இலகுவான முறையில் பயிற்சிகளை மேற்கொள்ள முடியும்.

c) தனிப்பட்டோர்

பல வாடிக்கையாளர்களுடன் பணிபுரியும் மற்றும் பலவிதமான விநியோகங்களை வழங்க வேண்டிய தனிப்பட்டோரை இது குறிக்கிறது. இவர்கள் கற்றல் முகாமைத்துவ முறைமையிலுள்ள பல்வேறு வகையான வசதிகளினூடாக தமது வாடிக்கையாளர்களுக்கான சேவைகளை வழங்குவர்.

**கற்றல் முகாமைத்துவ முறைமையின் உரிம (license) வகைகள் யாவை?**

a) திறந்த மூல (Open Source)

திறந்த மூல கற்றல் முகாமைத்துவ முறைமைகள் பொதுவாக இலவசம் மற்றும் நிகர்நிலையை அடிப்படையாகக் கொண்டவை. எங்கள் தேவைகளுக்கு ஏற்ப மூலக் குறியீட்டை மாற்ற முடியும். கூடுதலாக, பல திறந்த மூல செயலிகள் (Apps) நிகர்நிலையில் கிடைக்கக் கூடியதாக உள்ளது. இவற்றை வடிவமைப்பது, பிரச்சினைகளைத் தீர்ப்பது, உதவிக் குறிப்புக்கள் தொடர்பான பல நிகர்நிலை குழுக்கள் இணையத்தில் காணப்படுகிறது. இவற்றைப் பயன்படுத்த பொதுவாக ஓரளவு நிரலாக்க அனுபவம் தேவை.

b) இலவச உரிமம் (Free License)

பல இலவச கற்றல் முகாமைத்துவ முறைமைகள் உள்ளன, பொதுவாக திறந்த மூல அமைப்புகள இருப்பினும், உரிமம் அல்லது மாதாந்த கட்டணத்தில் நீங்கள் சேமிக்கும் பணம் உங்களுக்கு நிரலாக்க அனுபவம் இல்லையென்றால் தகவல் தொழில்நுட்ப ஊழியர்களுக்காக செலவிடப்பட வேண்டி வரலாம்.

c) கட்டண உரிமம் (Paid License)

கட்டணம் செலுத்தப்படும் கற்றல் முகாமைத்துவ முறைமைக்கு மாதாந்தம் அல்லது வருடாந்தம் கட்டணம் செலுத்தப்படும். இவ்வாறு பெறப்படும் மென்பொருட்கள் பல மேம்பட்ட வசதிகளுடன் நட்புறவான இடைமுக அம்சங்களையும் கொண்டு காணப்படும்.

**திரு.வே.நந்தகுமார்**
**விரிவுரையாளர்.**

## Let's Follow Our Own Models

As we know ragging has become a national issue in our country and the impact of it is really disastrous. According to the recent statistics, more than thousand students have become dropouts from various universities due to such immoral practices, throughout the country. But we should not forget that there are faculties in Sri Lanka, where the term ragging is not pronounced at all. One of them is the Colombo Medical Faculty. Here the senior undergraduates guide there juniors in many ways. They conduct regular meetings and provide suggestions related to syllabus contents and the exams. They even share their own materials with the freshers and maintain a real comradeship with them. Their sole purpose is to help the new students get acquainted with the university procedures for the sake of maintaining the standard and the fame of the university. Further, they conduct various extra-curricular activities such as games and cultural events among the freshers at the university levels and inter-university levels providing opportunities for them to get rid of their inhibition to a certain extent. This is an exemplary gesture of the senior students of the Colombo Medical Faculty and it should be followed by every faculty in the country to minimise the fear among the new entrants in the near future.

**Mr.T.Mohan**
**Lecturer.**

## குருசேத்திரமே நீ வாழ்க!

கால நதியினி லாடியென்றுமே
குருசேத்திர முன் புகழ் வாழ்க
கோல யௌவனம் கொஞ்சும் மோகனம்
குறை வில்லாமலே திகழ்க
நீல வானிலே நீந்தும் வெண்ணிலா
நில மிசை தருமொளியாக
சீல நல்லறம் சிரிக்க மானுடம்
சிந்தனை விரித்தருள் புரிக
காலைக் கதிரவன் சாலத் தனஞ் செயும்
காட்சியின் மாட்சியு மாவாய்
வேலைத் தழுவிய வெற்றிச் செல்வியாய்
விளங்குக நீதியின் தாயாய்
பாலைப் பொழிதரு பசுவைப் போலவே
புரிந்தறி வூட்டுமுன் பான்மை
ஆலைக் கரும்பினை அமுதச் சர்க்கரை
ஆக்குவதுன தொழில் வாண்மை
கல்வி பயிற்று நல் கலைக் கோவிலில்
காலந் தோறும் நீ மலர்க
காவிய ஓவியக் கலைஞர் அறிஞர்
கருத்தாம் மடியினில் தவழ்க

**செல்வி க.விக்னேஷ்வரி**
**விரிவுரையாளர்.**

